**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.45/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**4 |
| Name | : | **ராஜபூபதி** |
| Father's / Husband Name | : | **அருணாச்சலம்** |
| Address | : | **அம்மாபாளையம் , பெரம்பலூர்** |
| Age | : | 51/2025 |

**தேதி : 07.01.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அம்மாபாளையத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். தேதி மாதம் வருடம் நியாபகமில்லை. சுமார் 1 வருடம் இருக்கும். 1 வருடத்திற்கு முன்பு நான் எனது காட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதற்காக வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. **என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.**

(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 02.11.2024 ஆம் தேதி 17.00 மணிக்கு நான் என் நண்பரான ரஞ்சித் குமார் களரம்பட்டி கிராமத்தில் சொந்தவேலையாக சென்றிருந்தபோது பெரம்பலூர் காவல் நிலையக் குற்ற எண். 826/2024 என்ற வழக்கின் சம்பவ இடத்தில் பெரம்பலூர் காவல் நிலைய ஆய்வாளர் பார்வையிட்டு வரைபடம் வரைந்து மகஜர் தயார் செய்ததாகவும் அதில் நானும் ரஞ்சித் குமாரும் சாட்சியாக கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.